# அம்தோ ருக்பா (Amdo, Hbrogpa)




**Population:**
583,700 (2000)
719,200 (2010)
886,000 (2020)
**Countries:** China
**Buddhism:** Tibetan
**Christians:** 100

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Brogpa, Made, Anduo, Ngambo

**மக்கள்தொகை:** 538,500 (1987, Language Atlas of China)

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, போதி, போதிஷ், வடக்கு திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 15

**புத்த மதத்தினர்:** 99%

**கிறிஸ்துவம்:** 0.1%

**வேதாகமம்:** சில பகுதிகள் கி.பி. 1862, புதிய ஏற்பாடு கி.பி. 1885, திபெத்திய பைபிள் கி.பி. 1948

**இயேசு திரைப்படம்:** உண்டு

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** அம்தோ; சங், அந்தோ

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : ADX01

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்

**வசிப்பிடம்:** ஏறக்குறைய 6,00,000 அம்தோ மக்கள் ருக்பா மொழி பேசுகிறார்கள். இவர்கள் மிகப் பரந்த குறைவான மக்கள் தொகையுடைய சின்ங்காய் மாநிலத்தின் கிழக்குப் பகுதியிலிருந்து வடபுறத்தில் கன்சு- சின்ங்காய் எல்லைவரை வசிக்கின்றார்கள். கன்சு மாநிலத்தின் தென்மேற்குப் பகுதி மற்றும் அருகாமையில் உள்ள சிசுவான் (Sichuan) மாநிலத்தின் வட பகுதிகளிலும் இவர்களுடைய வசிப்பிடத்தைக் காணமுடியும்.

**அடையாளம்:** ருக்பா என்பதின் பொருள் நாடோடி மேய்ப்பர்களாகும். இது அம்தோ மக்களின் நான்கு முக்கிய மொழிகளில் அதிகமானவர்களால் பேசப்படும் மொழியின் பெயருமாகும். இவர்கள் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் பட்டியலில் இணைக்கப் பட்டுள்ளனர். இந்த இனத்தில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு கிளைமொழிகளைப் பேசும் அநேகப் பிரிவுகளுண்டு.

**மொழி:** இம்மொழியில் நான்கு கிளை மொழிகள் உள்ளன. இதில் பரவலாகப் பேசப்படும் மொழி ருக்பா மொழியாகும். ருக்பா கிளையில் 15 வட்டார மொழி வழக்குகள் உள்ளன.




**வரலாறு:** கி.பி. 1700 களில் அம்தோ பகுதி சீனா சாம்ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டது. சீனர்களோடு நடந்த கொடூரமான யுத்தத்தின் விளைவாக அம்தோ திபெத்தியர்கள் மத்தியில் அதிக எண்ணிக்கையில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. தலாய் லாமாவின்படி கி.பி. 1983 வரைக்கும் 49,049 பேர் யுத்தத்தினாலும் 1,21,982 பேர் பட்டினியாலும் உயிரிழந்துள்ளனர்.

**பழக்கவழக்கம்:** பெரும்பாலான அம்தோக்கள் நாடோடி மேய்ப்பர்களாவார்கள். இவர்கள் ஆடு, செம்மறியாடு மற்றும் யாக் போன்ற மிருகங்களை வளர்கின்றனர். தங்களுடைய மந்தை நிலத்தை முழுவதுமாக மேய்ந்த பிறகு வேறொரு நிலத்தைத் தேடிப்போகின்றார்கள்.

**மதம்:** பெரும்பாலான ருக்பா அம்தோக்கள் புத்தமதத்தினராவார்கள். இந்நாட்களில் திபெத்தியர்களின் பழமையான மதமான பொன் (Bon) மதத்தின் எழுச்சியை அம்தோக்கள் மத்தியில் காணமுடியும். இம்மதம் மந்திரதந்திரம், பிசாசுகளை வழிபடுதல் மற்றும் சூனியம் ஆகியவற்றை உட்கூறுகளாகக் கொண்டது.

**கிறிஸ்துவம்:** கி.பி. 1949 க்கு முன்பு அநேகக் கிறிஸ்துவ நிறுவனங்கள் அம்தோப் பகுதியில் பணிசெய்தன. கி.பி. 1888 ல் சைனா இன்லேன்ட் மிஷனைச் (China Inland Mission) சேர்ந்த மிஷனரி சிசில்போஹில் (Cecil Pohil) ஷீநிங்கில் (Xining) ஒரு பணித்தளத்தை நிறுவினார். பின்னர் திபெத்திய பணிகளுக்கான மையமாகச் சொங்பானைத் தேர்ந்தெடுத்துப் பணியை ஆரம்பித்தார். கி.பி. 1922 ன் அறிக்கையில் இவ்வாறு எழுதப்பட்டது "மக்களுடைய நம்பிக்கையை அதிகமாகப் பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. அநேகர் இரட்சிப்பைப் பற்றித் தெளிந்த ஞானத்தைப் பெற்றுக் ˙கொண்டுள்ளனர்." கி.பி. 1986 ன் அறிக்கையில் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது "சீனப் புதுவருடத்தன்று கன்சு மாநிலத்தின் சில கிறிஸ்துவக் குடும்பங்கள் ஆராதிக்கும்படி கூடிவந்தனர். அவர்களது அண்டை வீட்டார்கள் கிறிஸ்துவத்தை வேரறுக்கும் எண்ணத்தோடு அவர்களைக் கலைந்துபோகச் சொன்னார்கள். அவர்கள் ஆராதனையை நிறுத்தாததால் அந்தக் கும்பல் அவர்களைக் கொடூரமாகத் தாக்கியது. மறுநாள் காலையில் துன்புறுத்தினவர்களுடைய ஆடு, மாடு, மற்றும் குதிரைகள் மரித்தன. அவர்களுடைய குடும்பத்தினரும் ஒருவர்ப்பின் ஒருவராக மரித்தனர். தேவகோபம் தங்கள்மேல் வந்ததை உணர்ந்த அவர்கள் கிறிஸ்தவர்களிடத்தில் தங்களுக்காக ஜெபிக்கும்படி வேண்டிக்கொண்டனர். கர்த்தர் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டார்; வியாதியஸ்தர்கள் மற்றும் மரிக்கும் நிலையிலுள்ளவர்களும் சுகமானார்கள். அதன் விளைவாக நூறு அம்தோ திபெத்தியர்கள் இரட்சிக்கப்பட்டனர்."

இந்நாட்களில் அம்தோ திபெத்தியர்கள் மத்தியில் குறைந்தது ஐந்து சிறு சபைகள் உள்ளன. தெற்கு கன்சுவில் உள்ள லின்தன் (Lintan) மாநிலத்தில் 200 சொனி திபெத்தியர்கள் சபையில் ஆராதிக்கக் கூடிவருகின்றனர்.